# அவருடைய அற்புதமான அன்பும் கிருபையும்

# உங்களுக்கு சாரா எழுதும் கடிதம்

எல்லா நாமத்திற்கும் மேலான நாமமாகிய இயேசு கிறிஸ்து என்ற விலையேறப் பெற்ற நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன்.

என் அன்பான நண்பனே, **சமாதானம், சந்தோஷம், அன்பினால்** நிரப்பப்பட்ட ஒரு புதிய வாழ்க்கைகாக நீங்கள் எப்பொழுதாவது ஏங்கினதுண்டா? சோர்வு, தவிப்பு, குற்ற உணர்வு, வெட்கம், நம்பிக்கையற்ற தன்மை, தனிமை இவைகளால் பாதிக்கப்பட்டு, சில வேளைகளில் மரணம் அல்லது தற்கொலை என்ற எண்ணம் கொள்கிறீர்களா?

**இன்று** நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் **புதிய வாழ்க்கை**யை அனுபவிக்க ஆரம்பிக்கலாம். இது உங்களுக்கு தேவன் கொடுக்கும் **இலவச ஈவு**(பரிசு)! இந்த புதிய வாழ்க்கையை பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமா? தொடர்ந்து படியுங்கள்.......

வேதாகமம் சொல்லுகிறது
தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத்தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். (ஆதியாகமம் 1:27)

தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். (ஆதியாகமம் 2:7)

தேவன் ஒரு பெண் துணையை ஆதாமுக்குக் கொடுத்தார். அவளுக்கு ஏவாள் என்று பெயரிட்டார். அவர்கள் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்து வந்தார்கள். நீங்கள் எந்த மரத்தின் கனியையும் சாப்பிடலாம். ஆனாலும் நன்மை, தீமை அறியக் கூடிய மரத்தின் கனியை மாத்திரம் சாப்பிடக் **கூடாது** என்று தேவன் அவர்களுக்கு சொல்லியிருந்தார். நீங்கள் என் கட்டளையை மீறி அதை சாப்பிட்டால், கட்டாயமாக மரித்து போய் விடுவீர்கள் என்றும் சொன்னார்.

ஆனால், எதை சாப்பிடக் கூடாது என்று தேவன் அவர்களுக்கு சொல்லியிருந்தாரோ அதை அவர்கள் சாப்பிட்டு, தேவனுடைய வார்த்தைக்குக் **கீழ்படியாமல்** பாவம் செய்தார்கள். அதன் விளைவாக அவர்கள் **ஆவியில் மரணம்** அடைந்தார்கள். (தேவனிடம் இருந்து விலக்கப்பட்டு போனார்கள்) அந்த ஏதேன் தோட்டத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள். (ஆதியாகமம் 3:1-24ஐ பாருங்கள்) பின்பு அவர்கள் **சரீர மரணமும்** அடைந்தார்கள். (ரோமர் 5:12ஐ படியுங்கள்)

வேதாகமம் சொல்லுகிறது...

ஒரே மனுஷனாலே பாவமும் (தேவனுக்கு கீழ்படியாமை; தேவனுடைய சட்டத்தை மீறுவது) பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும், இதுவும் ஆயிற்று. (ரோமர் 5:12)

அந்த படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. (ரோமர் 3:10)

ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. (பிரசங்கி 7:20)

எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்கள் ஆனார்கள். (ரோமர் 3:23)

இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள். தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்கியேல் 18:4)

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23(அ))

ஆகையால், உலகத்தில் உள்ள **எல்லா** மக்களும் பாவிகள், அவர்கள் மரண(நரக) தண்டனையை அனுபவிக்க வேண்டும். **ஆனால்,**

> "...... கர்த்தருடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தர் ஆகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்". (ரோமர் 6:23 (ஆ) (நித்திய ஜீவன் என்று சொன்னால், பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலை பெற்று, பரலோகத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் என்றென்றும் வாழ்வதுதான்)

தேவன் நம்மை அதிகமாக நேசித்ததினால் நம்மை பாவத்திலிருந்து, எரி நகரத்திலிருந்து, மீட்பதற்காக (திரும்பவும் விலைகொடுத்து வாங்க) தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்காக அனுப்பினார்.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)

இயேசு, தேவனுடைய குமாரன், **நம்முடைய இடத்தில் மரித்து**, தம்முடைய பாவமற்ற வாழ்வினாலும், விலையேற பெற்ற இரத்தத்தினாலும் நம்முடைய பாவங்களுக்கான கிரயத்தை செலுத்தினார். (ரோமர் 5:8, 10:9, 1 பேதுரு 1:18−19 ஐ பார்க்கவும்) இயேசு அடக்கம் பண்ணப்பட்டார், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். (1 கொரிந்தியர் 15:3−4ஐ பார்க்கவும்)

"......... இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை". (எபி 9:22)

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, ...... ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. (லேவியராகமம் 17:11)

சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது, இரத்தம் ஜீவனுக்குச் சமானம், (லேவியராகமம் 17:14)

நாம் அவருக்குள் தேவனுடைய நீதி ஆகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். (2 கொரிந்தியர் 5:21)

தேவன் தமது பங்கை செய்து விட்டார். இப்போது உங்கள் **தருணம்,** அதற்கு **நீங்கள் இப்பொழுது** செய்ய வேண்டியது என்ன?

இயேசு சொன்னார், ஒருவன் பரலோகத்தில் பிரவேசிக்க விரும்பினால், அவனோ/அவளோ, ஆதாமிலிருந்து பெற்ற அவர்களுடைய ஆவியில் (ஆதாமின் பாவத்தினால் மரித்து போயிருக்கும் ஆவி) மறுபிறப்பு அடைய வேண்டும், புதிதாக பிறக்க வேண்டும்.

> ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (யோவான் 3:5)

இங்கே "**ஜலம்**" என்பது **தேவனுடைய வார்த்தை** "**ஆவி**" என்பது தேவனுடைய **பரிசுத்த ஆவி.**

> அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவன் உள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிபிக்கப் பட்டிருக்கிறீர்களே. (1 பேதுரு 1:23)

தெளிவாக சொன்னால் ஒரு பாவி தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் பொழுது அது அவன் இருதயத்தை உருத்தும்.

அப்போது பரிசுத்த ஆவியானவர் "பாவத்தைக்" குறித்தும், "நீதியைக்" குறித்தும், "நியாயத்தீர்ப்பைக்" குறித்தும் அவர்களுக்கு உணர்த்துவார். (யோவான்16:7-12ஐ பார்க்கவும்)

> தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)

நீங்கள்

நரகத்தை நோக்கி செல்கிறீர்கள் என்பதை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு புரிய வைப்பார். நீங்கள் (அதாவது எல்லா ஜனங்களும்) உங்களை தாழ்த்தி, தேவனை நோக்கி, உங்கள் பாவங்களை உணர்ந்து மனம் திரும்பும் பொழுது, தேவன்:

- உங்களை, உங்கள் பாவங்களிலிருந்து **மன்னிப்பார்.**
- இயேசு உங்களுக்காக இந்த உலகத்தில் வந்து உங்கள் இடத்தில் உங்களுக்காக மரித்தார் என்று நம்புவதற்கு **விசுவாசத்தைத்** தருவார்.
- **கிருபையைத்** (தகுதியில்லாதவர்களுக்குத் தயை) தருவார்.
- இயேசுவை உங்கள் வாழ்க்கையின் சொந்த இரட்சகராக (தேவன்) ஏற்றுக் கொள்ள உதவி செய்வார்.

நம்முடைய பாவங்களை **நேரடியாக தேவனிடத்தில்** அறிக்கையிட்டு (ஒப்புக்கொண்டு/மன்னிப்புக் கேட்டு) அவைகளிலிருந்து **உண்மையாய்** மனந்திரும்ப வேண்டும்.

அதற்கு அர்த்தம் என்ன என்றால், தேவனோடு நம்முடைய பாவங்களை குறித்து ஒப்புக்கொண்டு, **அதிலிருந்து தேவனிடத்தில்** திரும்பி, பரிசுத்தமும், தூய்மையான ஒரு வாழ்க்கையை, அவர் வார்த்தையின் படி வாழ வேண்டும். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கும், விலையேற பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்மை சுத்திகரித்து, வெண்மையாகவும், தேவன் தம்முடைய அறிக்கைக்காக காத்திருக்கிறார். (1யோவான் 1:19) (ஏசாயா 1:18)

நீங்கள், உங்கள் வீட்டிற்கு ஒரு விருந்தினரை அழைத்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன செய்வீர்கள்? உங்கள் வீட்டை சுத்தமாக்கி, அவர்கள் வந்து கதவைத் தட்டும் போது கதவைத் திறந்து, “உள்ளே வாருங்கள” என்று அழைப்பீர்கள். சரிதானா?

ஒரு விருந்தினரை அழைப்பதற்கு வீட்டை எப்படி சுத்தமாக வைக்க நாம் விரும்புவது போல இயேசுவை அழைப்பதற்கு நம் இருதயத்தை சுத்தமாக வைக்க வேண்டும். முதலாவது நம் இருதயம் எவ்வளவு அழுக்கானது, (பாவத்தால் நிறைந்தது) என்பதை உணர வேண்டும். உண்மையில் நம் இருதயம் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்றால், நாம் அதை எவ்வளவு கேடுள்ளது என்று பார்க்க முடியாமல் இருக்கிறோம்.

> எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? (எரேமியா 17:9)

இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார், அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள், இதைமாத்திரம் கண்டேன். (பிரசங்கி 7:29)

எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும்,

களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார். (மாற்கு 7:21-23)

சோப்பும், தண்ணீரும் நம் இருதயத்தைச் சுத்தம் செய்யாது. நம் இருதயத்தைச் சுத்தம் செய்யக்கூடிய ஒரே பொருள் இயேசுவின் இரத்தம் மட்டுமே.

> அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1யோவான் 1:7)

> அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார். (எபேசியர் 1:7-8)

> உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருப்பீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:18-19)

நம்முடைய சரீரம் ஒரு வீடு, இருதயம் அதன் கதவு. அது உள்ளே பூட்டப்பட்டிருக்கிறது. அதனைத் திறந்து இயேசுவை இருதயத்திற்குள் வரவேற்க வேண்டும்.

> இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோட போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான் (வெளிப்படுத்துதல் 3:20)

உணவை ஆயத்தம் செய்யும் போது, அது நன்றாக இருக்கிறதா என்று அறிய, அதை ருசித்துப் பார்க்கிறோம். அது நன்றாக இருந்தால் தான் மற்றவர்களுக்கு கொடுப்போம். சரிதானா? அதே போல் நானும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்து அது நன்றாக இருக்கிறது என்று அறிந்திருக்கிறேன். அதனால் தான் அவரை உங்கள் இருதயத்திலும், வாழ்க்கையிலும் ஏற்றுக் கொள்ள உங்களை ஊக்குவிக்கிறேன். (உற்சாகப்படுத்துகிறேன்.)

> நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோமர் 10:9-10)

என் நண்பனே, கீழே இருக்கும் ஜெபத்தைக் கவனமாக படியுங்கள். இதை நீங்கள் விசுவாசித்தால், இயேசுவை உள்ளத்தில் அழைக்க அதை ஜெபிக்கலாம். அல்லது உங்கள்

சொந்த வார்த்தைகளால் ஜெபிக்கலாம். உங்கள் இருதயத்திலிருந்து கவனமாக ஜெபிக்க மிகமுக்கியமானது, அப்பொழுது உங்கள் காதுகளால் அதை கேட்க முடியும். ஒரு நிமிடம் தான் ஆகும்......

நீங்கள் தேவனிடத்தில் ஜெபிக்கிறீர்கள், என்னிடத்தில் அல்ல.

நாம் ஜெபிப்போம்......

என்னை அதிகமாய் நேசிக்கிற என் தேவனே நான் ஒரு பாவி. என்னை மன்னியும். நான் செய்த பாவங்களை எனக்கு தயவு செய்து மன்னியும்.

இயேசு எனக்காக தம்முடைய விலையேற பெற்ற இரத்தத்தை சிந்தி மரித்தார் என்பதை நான் நம்பகிறேன். மீண்டும் நீர் அவரை உயிரோடு எழுப்பினீர் என்பதையும் நான் நம்புகிறேன்.

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் என்னைக் கழுவி, சுத்திகரித்து பனியை போல என்னை வெண்மையாக்கும்.

இப்பொழுது நான் இயேசுவை என் வாழ்க்கையின் ஆண்டவராகவும், என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறேன்.

என் இயேசுவே, என் இதயத்திற்குள் இப்பொழுதே வாரும். இப்பொழுது என் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன், என் இயேசுவே. இயேசுவின் நாமத்தினாலே, என் வாழ்க்கையில் இருந்து பிசாசையும் அவன் கிரியைகளையும் கடிந்து அப்புறப்படுத்துகிறேன்.

என் இயேசுவே என் இருதயத்தை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும், நீர் விரும்புகிறபடி என்னை உருவாக்கி, என்னை எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்தும்.

என்னை மன்னித்து, இரட்சித்து உம்முடைய சொந்த பிள்ளையாக மாற்றினதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன், என் தகப்பனே.

இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கிறேன். ஆமென்.

என் நண்பனே நீங்கள் இப்பொழுது உண்மையாகவே உங்கள் உள்ளத்தில் இருந்து ஜெபித்திருந்தால், உங்கள் இடத்தில் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். யோசித்து பதில் கூறுங்கள்.

இயேசு இப்போது எங்கே இருக்கிறார்?

- 
- 
- 
- 

உங்களுடைய பதில், "என் இருதயத்தில் இருக்கிறார்" என்பதாய் இருந்தால், நீங்கள் உண்மையாக ஜெபித்திருக்கிறீர்கள், என்று அர்த்தம் (உங்கள் பதில் அது இல்லை என்றால், திரும்பவும் கவனமாக ஜெபியுங்கள்). ஆம், இயேசு உங்கள் இருதயத்தில் தான் இப்பொழுது இருக்கிறார். யாராவது நமக்கு பரிசு கொடுத்தால் 'நன்றி' என்று கூறுகிறோம் அல்லவா. "நன்றி" என்பது விசுவாசத்தின் மிக தெளிவான அறிக்கை. எனவே, இப்போது "நன்றி இயேசுவே" என்று இருதயத்தின் ஆழத்திலிருந்து கூறுங்கள்.

நீங்கள் அந்த ஜெபத்தைச் செய்து இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவம், ஏற்றுக் கொள்ளும் வரை, அவர் உங்கள் படைப்பாளியாகவும் நீங்கள் அவருடைய படைப்பாகவும் இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது அவரை ஏற்றுக் கொண்ட பின்பு அவர் உங்களது அன்பான தகப்பனாகவம். நீங்கள் அவருடைய பிரியமுள்ள மகள் / மகன் ஆகவும் மாறியிருக்கிறீர்கள்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்கும் முன்பு, பிசாசு உங்கள் தகப்பனாக இருந்தான். ஆனால் இப்பொழுது தேவன் உங்கள் பிதாவாக இருக்கிறார், நீங்கள் அவருடைய விலையேற பெற்ற பிள்ளை (யோவான் 8:44ஐ பார்க்கவும்) அவருக்கு நாம் எவ்வளவு கடன்பட்டிருக்கிறோம் பாருங்கள்!

தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கு ஒரே நிபந்தனை தான் உள்ளது. (இயேசு கிறிஸ்துவின்) நாமத்தை விசுவாசிப்பதினால், அவரை (இயேசு கிறிஸ்துவை) பெற்றுக் கொள்வது.

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

> அவர்கள், இரத்தத்தினாலாவது மாமிசத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். (யோவான் 1:12-13).

இந்த உலகத்தில் ஒன்றை தவிற மற்ற எல்லாவற்றையும் பணத்தினாலோ, கட்டாயப்படுத்தியோ பெற்றுக் கொள்ளலாம். பெற்று கொள்ள முடியாத அந்த ஒன்று ......

அன்பு! அதை தான் தேவன் நம்மிடத்தில் விரும்புகிறார். அநேகர் தேவனிடத்தில் தேவைகள் சந்திக்கப்பட போவார்கள். பிறகு போய் தங்கள் இஷ்ட பிரகாரம் வாழ்கிறார்கள்.

தேவன் நமக்காக செய்ததை புரிந்துக்கொண்டு, நம்முடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும், முழு மனதோடும் அவரை நேசிக்க வேண்டும். (லூக்கா 10:27ஐ பாருங்கள்)

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:8)

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32)

வேதாகமத்தின் படி நீங்கள் இப்பொழுது பாதுகாக்கப்பட்டு விட்டீர்கள் (மறுபிறப்பு) அடைந்து விட்டீர்கள். நீங்கள் இப்பொழுது தேவனுடைய குடும்பத்தில் புதிதாய் பிறந்த குழந்தை.

எனவே, மகிழ்ந்து சந்தோஷமாய் இருங்கள். நீங்கள் இப்பொழுது தேவனுடைய இராஜ்யத்தில் புதிய பிள்ளையாக மாறிவிட்டீர்கள். புதிய பிள்ளை என்றால், ஒரு புதிய மனிதர் ஆகி விட்டீர்கள்.

**இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின** (2 கொரிந்தியர் 5:17)

இதுவே, தேவனது எளிமையான "இரட்சிப்பின் திட்டம்"

காணாமல் போனவர்களைப் பற்றியோ, காணாமல் போன பொருட்களைப் பற்றியோ பத்திரிக்கை மூலமாகவோ அல்லது தொலைகாட்சி மூலமாகவோ, செய்திகளை நீங்கள் படித்தோ, பார்த்தோ இருப்பீர்கள். ஒரு வேளை அப்படி காணாமல் போன நபர்களையோ, பொருட்களையோ கண்டு பிடித்து கொடுப்பவர்களுக்கு தக்க வெகுமதி அளிக்கப்படும் என்றும் விளம்பரம் கொடுத்தவர் சொல்லியிருப்பார். இது பொது மக்களுக்காக மற்றும் தொலைகாட்சி பார்க்கிற அல்லது பத்திரிக்கை படிக்கிறவர்களுக்காக கொடுக்கப்படும் ஒரு **சந்தர்ப்பம்.** இருந்தாலும் யார் அதை கண்டு பிடித்து கொண்டு வந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்குத் தான் அந்த பரிசு கொடுக்கப்படும், சரி தானே?

அது போலத்தான் இரட்சிப்பு என்ற இலவசமான பரிசைத் தேவன், இயேசு கிறிஸ்துவின் மூலம் எல்லா மனிதருக்கும் கொடுத்தார். இதை உலகத்தில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் கேள்விப்பட, வழிகளும் ஏற்படுத்துவார். ஆனாலும் யாரெல்லாம் அதை **விவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறார்களோ,** அவர்களுக்குத் தான் அந்த இரட்சிப்பின் பரிசு கொடுக்கப்படும.

தேவன் அவருடைய கிருபையால் இரட்சிப்பை நமக்கென்று கொடுத்தார் (அந்த கிருபையை பெற்றுக் கொள்ள நமக்குத் தகுதி இல்லை) நாம் அதை விசுவாசத்தினால் (நம்பிக்கை

மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்) பெற்றுக்கொள்ள (சொந்தமாக்கிக் கொள்ள) வேண்டும். எந்த பணமும் கொடுக்க வேண்டியதில்லை அதனால் தான் அது 'இலவச பரிசு' (ரோமர் 6:23)

> தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் (2 கொரிந்தியர் 9:15)

"இலவச பரிசு" என்றால் "மதிப்பில்லாத பரிசு" என்று அர்த்தம் அல்ல. இரட்சிப்பு என்பது தேவன் மனிதர்களுக்காக கொடுக்கும் மிகவும் மதிப்புள்ள விலையேற பெற்ற பரிசாகும். ஏனென்றால், இயேசு கிறிஸ்து தம்முடைய விலையேற பெற்ற இரத்தத்தினாலும், ஜீவனினாலும் அந்த கிரயத்தை செலுத்தினார்.

ஒரு வேளை நான் உங்களுக்கு ஒரு பரிசு கொடுக்கிறேன். அந்த பரிசு ஒரு பேனா என்ற வைத்துக் கொள்வோம். இது "**ஒரு பேனா**" தானே என்ற சொல்லி கவனக் குறைவாக அதை தூர எறிந்துவிடலாம், அல்லது இது ஒரு அழகான "**பேனா**" என்ற சொல்லி தினசரி அதை உபயோகிக்கலாம். உங்களது இரட்சிப்பை **ஜீவனோடு** வைத்துக் கொள்ளுங்கள்!!.

**சுகத்திற்காக ஒரு ஜெபம்!**

அன்பான நண்பனே நீங்கள் இருதய நோய், முதுகு வலி, எய்ட்ஸ், புற்றுநோய் அல்லது வேறு எந்த வியாதியினாலும் அவதிப்படுகிறீர்களா? நீங்கள் மன உளைச்சலினால் வேதனைப்படுகிறீர்களா? தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே உங்கள் பரிகாரி. இயேசு கிறிஸ்து எல்லா விதமான சரீர மற்றும் மன நோய்களையும் சுகமாக்க வல்லவராயிருக்கிறார். ஆனால் நீங்கள் அவர் நாமத்திற்கே மகிமை செலுத்த வேண்டும். அவரிடம் சுகம் பெற்றவுடன், நீங்கள் எத்தனை பேருக்கு அறிவிக்க முடியுமோ, அவர்களுக்கு இயேசு என்னை சுகப்படுத்தினார் என்று கூறி அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். "சரி" என்றால், உங்கள் சரீரத்தில் எங்கு வியாதி இருக்கிறதோ அந்த பகுதியில் கை வைத்து, இப்படி ஜெபியுங்கள்:

"என் ஆண்டவனாகிய இயேசுவே, நீர் தேவனுடைய குமாரன். உம்முடைய வார்த்தை **1பேதுரு 2:24-ன் படி "உம் தழும்புகளால் குணமானோம்"** நான் ________________ (உங்கள் வியாதியைக் குறிப்பிடுங்கள்) யினால் அவதிப்படுகிறேன். என் ஜெபத்தை கேட்டு, நீர் என்னை முற்றிலும் குணமாக்க உம்மால் கூடும். நான் உம்முடைய ஜீவனுள்ள வார்த்தையை வாசித்து, என் வாழ்நாள் முழுவதும் அதின்படி வாழ்ந்து, உம் நாமத்தை மகிமைப்படுத்துவேன். என்னை சுகப்படுத்தினதற்காக நன்றி. ஆமேன்".

வேதாகமம் (தேவனுடைய வார்த்தை), தேவன் எனக்கும், உனக்கும், மனித குலத்திற்கும் தேவன் கொடுத்திருக்கும் கையேடு.

நாம் இங்கே எப்படி வாழ வேண்டும் என்று தேவன் கூறும் புத்திமதிகள்...
நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது...

இனி வரும் வாழ்க்கைக்காக ஆயத்தப்படும்படி ஆலோசனைகள்...

முன்னே கூறியது போல, நீங்கள் இப்போது தேவனுடைய நித்தியக் குடும்பத்தில் புதிதாய்ப் பிறந்த குழந்தை. பிறந்த குழந்தைக்கு தேவையான பால், "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால்" (1பேதுரு 2:2).

வேதகாமம் கூறுகிறது: நம்முடைய நீதிகளெல்லாம் தேவனுக்கு முன்பாக அழுக்கான கந்தையைப் போல இருக்கிறது. நம்முடைய சபையோ (சர்ச்) நாம் சார்ந்திருக்கும் நமது சமுதாயமோ நம்மை எரிநரகத்திலிருந்து காப்பாற்ற முடியாது. அல்லது நம்முடைய போதகரோ, தலைமைப் போதகரோ (Bishop) அல்லது முஸ்லீம் மத குருக்களோ (முல்லா) நம்மை எரி நரகத்திலிருந்து காப்பாற்ற முடியாது. வேதம் சொல்கிறது, நம்முடைய "நல்ல கிரியைகள்" எல்லாம் "தீட்டான வஸ்திரத்தைப் போல (ஏசாயா 64:6) (அழுக்கான கந்தைகள்) தேவனுக்கு முன்பாக இருக்கிறது. நம்முடைய மதமோ, சபை பிரிவுகளோ, நம்மை நரக அக்கினியிலிருந்து காப்பாற்ற முடியாது. நம்முடைய பாவங்களினிமித்தம் நாம் செல்ல வேண்டிய இடம் நரகமே! அது தான் நமக்குத் தகுதியான இடம். இயேசுவைத் தவிர எந்த மனிதனும் நம்மை எரி நரகத்திலிருந்து காப்பாற்ற முடியாது.

வேதாகமம், நாம் பரலோகத்தைச் "சம்பாதிக்க" முடியாது என்று கூறுகிறது. ஏனென்றால் அது இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையினால் தேவன் நமக்க கொடுக்கின்ற இலவசமான பரிசு. **இயேசுவே பரலேகத்திற்கு செல்லுவதற்கான ஒரே வழி.**

> கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. (எபேசியர் 2:8-9)

நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் தேவனாகவும், சொந்த இரட்சகராவும் ஏற்றுக் கொள்ளும் முன்னே மரித்திருந்தால் என்றும் அழியாத, முடிவில்லாத நரக அக்கினியை அடைந்திருப்பீர்கள். இதுவே காரியத்தின் கடுமை!!!.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, இரு நண்பர்களுக்குள்ள தனிப்பட்ட உறவாகும். என்னுடைய உறவு, எனக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் இருக்கிறது. உங்களுடைய உறவு உங்களுக்கும், கிறிஸ்துவுக்கும் இடையில் இருக்க வேண்டும். உங்களுடைய உறவை **நிலைக்கச்** செய்யுங்கள்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தால், நீங்களும் ஒரு கிறிஸ்தவர் என்ற நினைத்திருப்பீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால், ஒருவரும் கிறிஸ்தவராக பிறப்பதுமில்லை, கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளருவதினால் கிறிஸ்தவர் ஆவதும் இல்லை. ஏனென்றால், வேதாகமத்தில் "தேவனிடத்தில் பட்சபாதமில்லை" (ரோமர் 2:11) என்று கூறுகிறது. ஒரு முஸ்லீம் அல்லது இந்து குடும்பத்தில் பிறப்பது தவறல்ல. கிறிஸ்து அனைத்து மனிதர்களுக்காகவும் மரித்தார். (யோவான் 1:12-13, ரோமர் 5:6ஐ பார்க்கவும்)

அடிமையென்றும் இல்லை, சுயாதீனனென்றும் இல்லை, கத்தோலிக்கன் என்றும் இல்லை. கிறிஸ்தவனென்றும் இல்லை, பெயர் கிறிஸ்தவனென்றும் இல்லை, முஸ்லீம் என்றும் இல்லை, இந்து என்றும் புத்தன் என்றும் இல்லை, நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்கள் ஒன்றாக இருக்கிறீர்கள், கிறிஸ்து எல்லாரிலும் இருக்கிறார். (கலாத்தியர் 3:28, கொலோசெயர் 3:11ஐப் பார்க்கவும்) யூதனென்றும் இல்லை கிரேக்கனென்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. விருத்தசேதனம் உள்ளவனென்றும் விருத்த சேதனம் இல்லாதவனென்றும் இல்லை.

> யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை எல்லோருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளும் யாவருக்கும் ஐசவரியசம்பன்னராய் இருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தை தொழுகிறவன் இரட்சிக்கப்படுவான்.
> (ரோமர் 10:12-13)

> அறியாமை உள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போல் இருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்கும் உள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார். (அப் 17:30)

> அன்றியும் மனந்திரும்பதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது
> (லுக்கா 24:47)

அநேகர், கடவுள் இல்லை என்று நினைப்பார்கள், இன்னும் பலர் கடைசி நிமிடத்தில் தேவனைத் தேடலாம் என்று நினைப்பார்கள். ஆனால், அவர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில் அவர்கள் மரிக்க வாய்ப்பு உள்ளது என்பதை அவர்களால் உணர முடிவதில்லை. அவர்களுக்க அந்த கடைசி நிமிடம் கிடைப்பதில்லை. சிலர் நரகத்தை நினைத்து கேலியாய் எண்ணுவார்கள், ஆனால் நரகம் என்பது உண்மையான ஓரிடம்.

**பிரபலமான எழுத்தாளர் டேன்டி என்பவர், நரகத்தின் வாசலில், "உள்ளே பிரவேசிப்பவர்கள் நம்பிக்கையை இழந்துவிடுங்கள்" என்று எழுதியிருக்கலாம், என்று கூறுகிறார்.**

ஞானத்தில் சிறந்தவரான சாலமோன் ராஜா எழுதினார்:

> கீழான பாதாளத்தை விட்டு விலகுகிறவன் விவேகி (ஞானி)
> (நீதி மொழிகள் 15:24ஐ பார்க்கவும்)

அதற்கு அர்த்தம் என்னவென்றால், ஒரு மனிதன் 100 ஆண்டுகள் வாழ்ந்து ஒழுங்காக கோயிலுக்கும், சபைக்கும், மசூதிக்கும் சென்று, ஏழைகளுக்கு உதவி செய்து, எப்பொழுதும் ஜெபம் செய்து, தேவனிடத்தில் தனிப்பட்ட உறவு என்பது இல்லையென்றால், அவன் செய்தது அனைத்தும் பயனற்றது ஆகிவிடும், அவன் தோற்றுப் போனவனாக காணப்படுவான். அவர்கள் தேவனைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அழைக்காவிட்டால், தேவன் அவர்களை நரகத்தில் இருந்து காப்பாற்ற இயலாது. ஏனென்றால், தேவனுக்கு

அதற்கான வல்லமை இல்லை என்று அர்த்தம் இல்லை. தேவன் தம்முடைய வார்த்தையை என்றும் மாற்றுவதில்லை.

> இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். (எபிரெயர் 13:8)

> நான் கர்த்தர், நான் மாறாதவர் (மல்கியா 3:6 (அ))

தேவனுடைய கிருபையினால், நீங்கள் **இப்போது** அவருடைய பிள்ளை ஆகிவிட்டீர்கள். பரலோகத்தில் உள்ள, உங்கள் பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்து நீங்கள் எடுத்து வைக்கும் அடுத்த அடி, தண்ணீர் முழுக்கினால் ஞானஸ்நானம் எடுப்பது தான், அடையாளமாக கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலில் பங்கு பெற்று, உயிர்த்தெழுதலின் புதுமை ஜீவனில் நடை போட வேண்டும்.

தேவனுடைய நித்திய குடும்பத்தின் அங்கத்தினராக நீங்கள் இருக்கிறீர்கள் என்ற நிச்சயத்தைக் கொடுக்க, இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே இருக்கிறார். நீங்கள் அவருடைய பிள்ளை தான் என்பதை நிச்சயம் செய்வதற்காக உங்களோடே இருக்கிறார். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் முழுமையைப் பெற்று, அடையாளமாக அந்நியபாஷை பேசி, புதிய பரிசுத்த, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ வேண்டும்.

நாம் வேதாகமத்தில் மரங்களுக்கு ஒப்பிடப்படுகிறோம். நல்ல கனிகளாலே நல்ல மரமும் கெட்ட கனிகளாலே கெட்ட மரமும் அறியப்படும் என்று இயேசு கூறுகிறார். வேதாகமம் நம்மை மனந்திரும்புதலுக்கேற்ற நல்ல கனியைக் கொடுக்க சொல்கிறது.

மனந்திரும்புதல் என்றால் என்ன?

நீங்கள் (அதாவது எல்லா மனிதரும்) நரகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தீர்கள். சென்று கொண்டிருக்கும் பொழுது இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷத்தை தெரிந்து கொண்டீர்கள். பின்பு, பரிசுத்த ஆவியானவர் “பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உங்களுக்கு உணர்த்தினார். நீங்கள் ஒரு பாவி என்றும், நரகத்தை நோக்கி செல்கிறோம் என்றும் புரிந்துக் கொண்டீர்கள். நீங்கள் அங்கே தரித்து, தேவனிடம் திரும்பி, உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டு, கிறிஸ்துவை பின்பற்ற தீர்மானித்தீர்கள். இதுவே மனந்திரும்புதல், எளிதாக சொன்னால், உங்கள் வாழ்க்கையின் பாதையில் நீங்கள் எடுத்த ஒரு முழு திருப்பம் (திருப்பு முனை)

தயவு செய்து உங்கள் இருதயத்தைத் தாழ்த்தி, பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையும்”. பழக்க வழக்கங்களையும், உங்கள் பார்வைகளையும், முக்கியமாக உங்கள் பேச்சையும் மாற்ற இடம் கொடுங்கள். மறுபிறப்பு என்றால், முற்றிலும் ஒரு புதிய மனிதன் என்று அர்த்தம். நீங்கள் அப்படி இருக்கவே தேவன் விரும்புகிறார்.

> ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17)

நீங்கள் தினமும் சந்திக்கும் நபர்கள் உங்களிடத்தில் ஒரு மாற்றத்தை காண வேண்டும், கண்டு உங்களிடத்தில், "என்ன, ஏதோ ஒரு வித்தியாசம் உன்னிடத்தில் தெரிகிறது. அது என்ன?" என்று கேட்க வேண்டும். அப்போது, நீங்கள், "இயேசு எனக்குள் இருக்கிறார். அவர்தான் என்னை மாற்றினார்" என்று கூற முடியும்.

இரட்சிப்பு என்றால் என்ன என்று பிறருக்கு சொல்வதற்கு இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துங்கள். பின்பு இயேசுவை, அவர்கள் இதயத்திற்குள் ஏற்று. இரட்சிக்கப்பட்டு, மறுபிறப்பு அடைய அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

இந்த இணையதளத்தைப் பார்க்க அவர்களை ஊக்குவியுங்கள். மிகவும் எளிதான ஈ - மெயில் படிவத்தை தயவு செய்து நிரப்புங்கள். ஒரே நேரத்தில் உங்கள் எல்லா நண்பர்களுக்கும் கடிதம் அனுப்பலாம். (உங்களுக்கு பிடித்தமான சைட்களில் இதைக் குறித்து வையுங்கள்)

கவனத்திற்கு

நாம் அனைவரும் நியாயத்தீர்ப்பு நாளில், தேவனுக்கு முன்பாக நின்று நாம் செய்த அனைத்திற்கும், நாம் சொன்னதற்கும், (இந்த பூமியில்) நினைத்த அனைத்திற்கும் கணக்கு கொடுக்க வேண்டும் . வேதம் சொல்கிறது

> அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டு இருக்கிறது. (எபிரெயர் 9:27)

நியாயத்தீர்ப்பு நாளில் ஒவ்வொருவருக்கும், தேவன் தம்மை முகமுகமாய் சந்திப்பதற்கு நேரம் குறித்து வைத்திருப்பார். விதிவிலக்கு யாருக்கும் இல்லை. ஒருவரும் அதிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார்கள். ஆகையால் தேவனை நாளைக்குச் சந்திக்க போவது போல், இன்று வாழுங்கள்.

மேலே கொடுத்திருந்த ஜெபத்தை நீங்கள் சொன்னீர்களா? இல்லையென்றால், அதனை இப்போது சொல்லி, தேவனது இலவசமான பரிசை பெற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நாம் ஜெபிப்போம்......

என்னை அதிகமாய் நேசிக்கிற என் தேவனே நான் ஒரு பாவி. என்னை மன்னியும். நான் செய்த பாவங்களை எனக்கு தயவு செய்து மன்னியும். இயேசு எனக்காக தம்முடைய விலையேற பெற்ற இரத்தத்தை சிந்தி மரித்தார் என்பதை நான் நம்பகிறேன். மீண்டும் நீர் அவரை உயிரோடு எழுப்பினீர் என்பதையும் நான் நம்புகிறேன். இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் என்னைக் கழுவி, சுத்திகரித்து பனியை போல என்னை வெண்மையாக்கும். இப்பொழுது நான் இயேசுவை என் வாழ்க்கையின் ஆண்டவராகவும், என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறேன். என் இயேசுவே, என் இதயத்திற்குள் இப்பொழுதே வாரும். இப்பொழுது என் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன், என் இயேசுவே. இயேசுவின் நாமத்தினாலே, என் வாழ்க்கையில் இருந்து பிசாசையும் அவன் கிரியைகளையும் கடிந்து அப்புறப்படுத்துகிறேன். என் இயேசுவே என் இருதயத்தை உம்முடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பும், நீர் விரும்புகிறபடி என்னை உருவாக்கி, என்னை எல்லா சத்தியத்திற்குள்ளும் நடத்தும். என்னை மன்னித்து, இரட்சித்து உம்முடைய சொந்த பிள்ளையாக மாற்றினதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன், என் தகப்பனே. இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கிறேன். ஆமென்.

என் சகோதரனே/சகோதரியே நீங்கள் இப்போது ஜெபித்து இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்தால், இன்றைக்கு எனக்கு sarah@his-amazing-love.org என்ற விலாசத்தில் ஈ-மெயில் அனுப்புங்கள். அதனால், நான் உங்களோடு மிகவும் சந்தோஷப்படுவேன்.

இப்போது நீங்கள் அறிந்திருக்கிறது போல, ஒரு நபர் இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளாமல் மரித்தால், அவர்நித்திய நரகத்திற்கு போவார்கள். ஆகையால் இந்த இணைய தளத்தை உங்கள் அன்பான நண்பர்களுக்கும், நேசிக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்கள் எல்லோரும் ஆசிர்வதிக்கப்படட்டும்.

பாருங்கள், ‘‘மகிழ்ச்சி’’ மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது அதிகரிக்கிறது, ‘‘துக்கம்’’ பகிர்ந்துகொண்டால் குறைகிறது. ஒரே click செய்வதினால், இந்த மகிழ்ச்சியான செய்தியை உங்கள் நண்பர்கள் எல்லோருக்கும் பகிர்ந்து உங்கள் மகிழ்ச்சியை அதிகரிக்கப் பண்ணலாம்.

இந்த தளத்தை குறித்து வைத்து, அனுதின வாழ்க்கையில் சந்திக்கும் எந்த ஒரு நபருக்கும் அறிமுகப்படுத்தலாம்.

உங்களிடத்தில் வேதாகமம் உள்ளதா? இந்த நாளை உங்கள் வேதாகமத்தில் ‘‘நான் இரட்சிக்கப்பட்ட/மறுபிறப்பு அடைந்த நாள்’’ அல்லது ‘‘இயேசுவை நான் ஏற்றுக் கொண்ட நாள்’’ அல்லது ‘‘நான் கிறிஸ்தவன் ஆன நாள்’’ என்று குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

இது உங்கள் ஆவிக்குரிய பிறந்த நாள். யாரேனும் நீ இரட்சிக்கப்பட்டு, மறுபிறப்பு அடைந்தாயா? என்று கேட்டால் ‘‘ஆம்’’, இயேசுவின் கிருபையினால் நான் இரட்சிக்கப்பட்டேன்/மறுபிறப்பு அடைந்தேன் என்று சொல்லுங்கள். தேவன் உங்களை எல்லா நிறைவாலும் ஆசீர்வதிப்பாராக!

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாய் இருக்கவும், தேவகுமாரன் உடைய நாமத்தின் மேல் விசுவாசமாய் இருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். (1 யோவான் 5:13)

எல்லா நாமத்திலும் விலையேறப் பெற்ற, பரிசுத்தமான இரட்சகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்களை சகல வித உன்னதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கிறேன்.

‘‘என்னிடத்தில் வருகிறவனை புறம்பே தள்ளேன்’’ என்று வாக்கு பண்ணின என் ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் விலையேற பெற்ற, பரிசுத்தமான நாமத்தில் சகலவித ஆவிக்குரிய உன்னதமான ஆசீர்வாதங்கள் உங்களை ஆசீர்வதிக்கின்றேன்.

பரலோகத்தில் இருக்கும் நமது பிதாவின் அன்பும், ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் கிருபையும் சமாதானமும், பரிசுத்த ஆவியானவரின் அந்நியோன்னிய ஐக்கியமும் உங்களோடு என்றென்றும் இருப்பதாக. ஆமேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள்
அன்புள்ள,
**சாராள***

*சாராள் என்பது எழுத்துப் பெயர், எங்களிடம் வேலை பார்க்கும் ஒருவருடைய மகளின் பெயரும் கூட.